# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*************

**முறையீட்டு மனு எண் 046/2017/பே**

**ஆணை எண் 237 /2017/நாள் –20–09–2017**

திருமதி ஏ.சாந்தி,
க/பெ திரு டி.குமாரநாயகம்,
97–சி. 2வது ஐசக் தெரு,
நாசரேத்,
திருச்செந்தூர் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
நாசரேத் பேரூராட்சி,
திருச்செந்தூா வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம். --- எதிர் மனுதாரர்.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், நாசரேத் பேரூராட்சியில் 97–சி, 2வது ஐசக் தெருவில் வசிக்கும் திருமதி ஏ.சாந்தி, க/பெ திரு டி.குமாரநாயகம், தனது 21.01.2017 ம் தேதியிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.01.2017ல் பெறப்பட்டது. அதனைத் பரிசீலித்து இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 119/2017/பே/நாள் 31.01.2017 ல் முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவ (முறையீடுகள் தாக்கல் விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகள் 2015 விதி 6 ல் நிர்ணயிக்கப்பட்டவாறு உரிய படிவத்தில் ரூ 10/–க்கான நீதிமன்ற கட்ட வில்லையுடன் பூர்த்தி செய்து அனுப்பத்

தெரிவித்து ஆணையிடப்பட்டது. அதன்படி மேற்படி முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை உரிய முறையில் 09.03.2017ம் தேதியன்று இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தான், நாசரேத் பேரூராட்சியில் 2வது ஐசக் தெருவில் HDFC ல் கடன் பெற்று 2001 ம் ஆண்டு ஒரு வீடு வாங்கியதாகவும், தான் வாங்கிய வீட்டின் உரிமையாளர் மற்றும் மேற்படி தெருவில் உள்ள அனைவரும் வீடுகளின் பின்புறமாக சுவர் அமைத்திருந்தார்கள் எனவும், தனது வீட்டிலும் ஒரு தடுப்பு சுவர் 2001 ம் ஆண்டு முதல் இருந்தது எனவும் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். மேற்படி சுவற்றினை நாசரேத் செயல் அலுவலர், ஆக்கிரமிப்பு என்ற பெயரில் தனக்கு எந்த தகவலோ அல்லது அறிவிப்போ அளிக்காமல், தான் வீட்டில் இல்லாத வேளையில் சில பணியாளர்களுடன் வந்து சுவற்றினை உடைத்து சேதப்படுத்தியுள்ளார் என தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். மேற்படி செயல் அலுவலர் தன்னிடம் தெரிவித்திருந்தால் அல்லது தனக்கு நோட்டீஸ் அளித்திருந்தால் தானே மேற்படி சுவற்றினை அகற்றியிருப்பேன் எனவும் தனது மனுவில் தெரிவித்துள்ளதோடு, மேற்படி சுவற்றினை இடித்ததின் மூலம் ஆடு, மாடு மற்றும் சில சமூக விரோதிககளால் சமூக விரோத செயல்கள் செய்யவும் வழி வகை செய்துவிட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் தனது வீட்டை ஒட்டியுள்ள வீடுகளில் ஆக்கிரமிப்புகள் உள்ளதாகவும், ஆனால் அதை அகற்றாததால் மேற்படி செயல் அலுவலர் ஒருதலை பட்சமாக செயல்பட்டதாக தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளதோடு, இது குறித்து லஞ்சஒழிப்புத் துறைக்கு தான் மனு செய்ததாகவும், மேற்படி துறையினர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட சொன்னதின் அடிப்படையில் இம்முறைமன்ற நடுவத்தில் தான் முறையீடு செய்ததாகவும் தனது மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரியும் தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பேரூராட்சி செயல் அலுவலர், நாசரேத் அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 046/2017/பே/நாள் 15.03.2017 மற்றும் 02.05.2017 ன் மூலம் ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர், நாசரேத், தனது கடித எண் 22/2017/ நாள் 12.06.2017ன்படி முறையீட்டு மனுதாரரின் மனுவிற்கான தனது விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், நாசரேத் தேர்வு நிலை பேரூராட்சி, 17 வது வார்டு, 2 வது ஐசக் தெரு, கதவு எண் 97 – சி– யில் குடியிருக்கும் திருமதி ஏ.சாந்தி என்பவர் குறிப்பிட்டுள்ள வீட்டின் பின் பகுதி அரசுக்கு சொந்தமான அழகம்மாள் ஓடை பகுதியை முழுவதுமாக ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது. மக்கள் குறை தீர்க்கும் நாள் மனு மீது நடவடிக்கை எடுத்திட மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்திரவின்படி திருமதி ஏ. சாந்தி என்பவர் ஓடை பாதை மீது ஆக்கிரமித்து கட்டப்பட்ட வடக்கு பக்கம் உள்ள செங்கல் சுவர் வருவாய்த்துறை முன்னிலையில் அகற்றப்பட்டது எனவும், அழகம்மாள் ஓடை ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றும் பொருட்டு வருவாய்த்துறை மூலம் அளவீடு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், இதில் எவ்வித உள்நோக்கமும் கிடையாது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு தொடர்பாக நேரடி விளக்கம்/வாக்குமூலம் பெற வேண்டி இம்முறைமன்ற நடுவத்தில் 25.07.2017 பிற்பகல் 3.00 மணிக்கு நேரில் ஆஜராகி விளக்கத்தினை தெரிவிக்க கோரி, முறையீட்டு மனுதாரர் மற்றும் நாசரேத் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 119/2016/பே/நாள் 03.07.2017 ன் மூலம் ஆணையிடப்பட்டது.

25.07.2017 அன்றைய தினம் முறையீட்டு மனுதாரர் ஆஜராகவில்லை. நாசரேத் பேரூராட்சி செயல் அலுவலர் திரு ப.குற்றாலிங்கம் மட்டும் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது நேரடி வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் ஆறுமுகனேரி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும் மேற்படி நாசரேத் பேரூராட்சியில் 05.07.2017 முதல் கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். மேலும், 09.03.2017 ம் நாளிட்ட திருமதி ஏ.சாந்தி என்பவரது முறையீட்டு மனு குறித்த விவரம் தனக்கு தெரியும் எனவும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகள் நடைபெற்ற போது செயல் அலுவலர் பொறுப்பில் இருந்தவர் திரு முகமது இக்பால் ஷெரீப், எனபவர் எனவும் அவர் தற்போது பணி ஓய்வு பெற்று மதுரையில்

வசிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தற்போது நாசரேத் பேரூராட்சியில் பணிபுரியும் வரித்தண்டலர் திரு கணேசன், பொருத்துநர் திரு முருகன், மின்விளைஞர் திரு செல்வராஜ் ஆகியோர் இந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டபோது அங்கு பணியில் இருந்ததாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் அப்போது திருச்செந்தூர் வட்டாட்சியரும் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டபோது வந்திருந்ததாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேற்படி வட்டாட்சியர் தற்போது எங்கு உள்ளார் என்ற விவரம் தனக்கு தெரியாது எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரரது கட்டிடத்திற்குஅருகில் உள்ள ஒருவர் மக்கள் குறை தீர்க்கும் நாளன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனுவின் அடிப்படையில் திருச்செந்தூர் வட்டாட்சியர், மற்றும் நாசரேத் பேரூராட்சி செயல் அலுவலர், ஆகியோர்கள் பணியாளர்களுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றியுள்ளனர் எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். ஆனால் அதையொட்டி காணப்பட்ட 3 ஆக்கிரமிப்புகளில் சேர்ந்து கட்டப்பட்டுள்ள சுவர்கள் அகற்றப்படாமல் இருந்ததாகவும், தான் கூடுதல் பொறுப்பு ஏற்றுக் கொண்டபின்னர் ஆக்கிரமிப்பு குறித்து முழுமையாக அளவு செய்து குறியீடு செய்து வழங்குமாறு வட்டாட்சியரிடம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும், அனைத்து நிகழ்வுகளும் அப்போது பணியில் இருந்த செயல் அலுவலர், அப்போது பணிபுரிந்தவர்களும் தற்போது பணிபுரிந்து கொண்டிருப்பவர்களுமான பேரூராட்சி பணியாளர்களுக்கும் (முன்னால் மேற்கண்டவாறு சொல்லப்பட்டவர்கள்) அப்போது பணியில் இருந்து இந்த பணியில் ஈடுபடுத்தப்பட்ட திருச்செந்தூர் வட்டாட்சியருக்கும் தெரியும் என தனது நேரடி வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக நாசரேத் பேரூராட்சியின் தற்போதைய கூடுதல் பொறுப்பு செயல் அலுவலர் தெரிவித்த நபர்கள் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோரை விசாரித்து நேரடி வாக்குமூலத்தினை பதிவு செய்யும் பொருட்டு ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சி அலுவலகத்தில் 28.08.2017 அன்று முற்பகல் 11.00 மணி அளவில் நடைபெறும் நேரடி விசாரணையில் கலந்து கொண்டு தங்களது வாக்குமூலத்தினை பதிவு செய்ய ஆணையிட்டு இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 046/2017/பே/நாள் 02.08.2017ன் மூலம் (1) திருமதி ஏ.சாந்தி, முறையீட்டு மனுதாரர், முன்னாள் திருச்செந்தூர் வட்டாட்சியரும், தற்போதைய திருச்செந்தூர் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளருமான (2) திரு டி. செந்தூர்ராஜன்,

நாசரேத் பேரூராட்சியில் பணிபுரியும் பணியாளர்களான (3) திரு வெ.கணேசன், வரித்தண்டலர், (4) திரு பா.செல்வராஜ், மின்வினைஞர்- (நிலை.2), (5) திரு. வி . முருகன், தலைமை நீரேற்று நிலைய பொருத்துநர், ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

28.08.2017 அன்று முற்பகல் 11.00 அளவில் தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் திருச்செந்தூர் முன்னாள் வட்டாட்சியரும், தற்போது திருச்செந்தூர் கோட்டாசியரின் நேர்முக உதவியாளருமான திரு டி. செந்தூர்ராஜன் தனது நேரடி வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

.......திருமதி சாந்தி என்பவருடைய முறையீட்டு விவரம் மனு மூலம் அறிந்ததாகவும் தெரிவித்து, திருமதி சாந்தி என்பவரின் மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் அரசு புறம்போக்கு நிலம் எனவும், மாவட்ட ஆட்சியருக்கு இந்த ஆக்கிரமிப்பு குறித்து நேரடியாக மனு அளிக்கப்பட்டதாக தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார். இது குறித்து மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆணையிட்டதின் அடிப்படையில் ஏற்கனவே இந்த இடம் சர்வேயர் போன்றவர்களால் அளந்து ஆக்கிரமிப்பு உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில் மனுவில் கூறப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். இது மட்டுமின்றி அன்றைய தினம் மொத்தம் மூன்று ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி செய்யப்பட்டதாவும், இதில் எந்த இடத்திலும் விதிமீறலோ அச்சுறுத்தலோ இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

திரு வெ.கணேசன், வரித்தண்டலர், நாசரேத் பேரூராட்சி, ஸ்ரீவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில், 28.08.2017 அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற நேரடி விசாரணையின்போது தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

.......தான் நாசரேத் தேர்வு நிலை பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 09.12.2016 அன்று நாசரேத் பேரூராட்சி வார்டு எண் 17, 2-வது ஐசக் தெருவில் ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பாக செயல் அலுவலர் திரு ஜா.முகம்மது இக்பால் ஷெரீப், அவர்களால் பணியாளர்கள் அனைவரும் மேற்படி இடத்திற்கு வரும்படி அழைத்ததின்பேரில் பணியாளர்களுடன் சென்றிருந்ததாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். புகார்தாரர் திருமதி சாந்தி, க/பெ குமாரநாயகம், என்பவரது வீட்டின் காம்பவுண்டு

சுவற்றின் பின்புறம் ஒரு பகுதி நாரேத் பேரூராட்சி துப்புரவு பணியாளரால் அப்புறப்படுத்தப்பட்டது என தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். மேலும் ஆக்கிரமிப்பு அகற்றல் திருச்செந்தூர் வட்டாட்சியர் திரு. டி. செந்தூர்ராஜன், முன்னிலையில் காவல்துறை காவலர்களுடன் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதாகவும் ஆக்கிரமிப்பு அகற்றல் தொடர்பாக நாசரேத் பேரூராட்சி மூலம் முன்னறிவிப்பு தாக்கீது அனுப்பப்பட்டதாக தெரியவில்லை என தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

திரு பா.செல்வராஜ், த/பெ திரு செ.பால்பாண்டி, மின் வினைஞர்(நிலை-2) நாசரேத் தேர்வுநிலை பேரூராட்சி தனது வாக்குமூலத்தினை, 28.08.2017 அன்று ஸ்ரீவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையின்போது கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

.....தான் நாசரேத் தேர்வு நிலை பேரூராட்சியில் மின்வினைஞர் (நிலை-2) ஆக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 09.12.2016 அன்று நாசரேத் பேரூராட்சி, 17வது வார்டு, 2 வது ஐசக் தெருவில் ஆக்கிரமிப்பு அகற்றல் தொடர்பாக செயல் அலுவலர் திரு ஜா.முகம்மது இக்பால் ஷெரீப் அவர்களால் பணியாளர்கள் அனைவரும் மேற்படி ஆக்கிரமிப்பு இடத்திற்கு வரும்படி அழைத்ததின் பேரில் பணியாளர்களுடன் சென்றதாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். அப்போது மனுதாரராகிய திருமதி சாந்தி, க/பெ குமாரநாயகம், என்பவரது வீட்டின் காம்பவுண்ட் சுவரின் ஒரு பகுதி நாசரேத் பேரூராட்சி துப்புரவு பணியாளர்களால் அப்புறப்படுத்தப்பட்டாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். அப்போது வருவாய்த்துறை, திருச்செந்தூர் தாசில்தார் திரு டி. செந்துர்ராஜன், என்பவர் மற்றும் காவல்துறை காவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர் எனவும் ஆக்கிரமிப்பு அகற்ற வீட்டின் உரிமையாளருக்கு நாசரேத் பேரூராட்சியின் மூலம் முன்னறிவிப்பு தாக்கல் எதுவும் அனுப்பப்பட்டதாக தெரியவில்லை என தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

திரு வீ. முருகன், த/பெ வீரபுத்திரபிள்ளை, தலைமை நீரேற்று நிலைய பொருத்துனர், நாசரேத் தேர்வு நிலை பேரூராட்சி , ஸ்ரீவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் 28.08.2017 அன்று நடைபெற்ற நேர்முக விசாரணையின்போது அளித்த வாக்குமூலம்.

......தான் நாசரேத் தேர்வு நிலை பேரூராட்சியில் தலைமை நீரேற்று நிலைய பொருத்துனராக பணிபுரிந்து வருவதாகவும், நாசரேத் பேரூராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண் 17 கதவு எண் 97-சி, 2வது ஐசக் தெருவில் மேற்படி வீட்டின் உரிமையாளரான திருமதி அ. சாந்தி

என்பரால் அரசுக்கு சொந்தமான அழகம்மாள் ஓடை புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக வந்த புகாரின் அடிப்படையில் 09.12.2016 ல் செயல் அலுவலராக பணிபுரிந்த திரு ஜா.முகம்மது இக்பால் ஷெரீப் அவர்கள் கூறிய அறிவுரையின்படி மேற்படி இடத்திற்கு நாசரேத் பேரூராட்சி செயல் அலுவலர் திரு ஜா.முகம்மது இக்பால் ஷெரீப், திருச்செந்தூர் வருவாய் வட்டாட்சியர் திரு டி. செந்தூர்ராஜன், நாசரேத் பேரூராட்சி துப்புரவு பணியாளர் மூலம் நாசரேத் காவல் நிலைய காவலர்கள் மற்றும் மேற்படி அதிகாரிகள் முன்னிலையில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதாக தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார். மேற்படி வீட்டிற்கு ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பாக நாசரேத் பேரூராட்சி அலுவலகம் மூலம் முன்னறிவிப்பு நோட்டீஸ் ஏதும் வழங்கப்படவில்லை என்ற விவரத்தினையும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரரான திருமதி அ. சாந்தி, க/பெ த. குமாரநாயகம், 97–சி, 2வது ஐசக் தெரு, நாசரேத் அவர்களின் வாக்குமூலத்தினை ஸ்ரீவைகுண்டம் தேர்வுலை பேரூராட்சியில் அலுவலகத்தில் 28.08.2017 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

...... தான் ஸ்ரீ வைகுண்டம் அருகிலுள்ள புதுக்குடியில் ஆசிரியையாக பணிபுரிவதாகவும், 21.01.2017 ம் நாளிட்ட முறையீட்டு மனு தன்னால் அளிக்கப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். மீண்டும் மனு குறைபாடுகள் சரிசெய்து அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். முதலில் தனது மனுவினை லஞ்ச ஒழிப்புத்துறைக்கு அனுப்பியதாகவும், அவர்களின் அறிவுரையின்பேரில் இம்முறைமன்ற நடுவத்திற்கு தனது மனுவினை அனுப்பிவைத்ததாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். நாசரேத்தின் 97–சி, 2–வது ஐசக் தெருவில் 2001 ஆம் ஆண்டு தான் வாங்கிய வீட்டின் சொந்தக்காரர், மற்றும் அந்த தெருவில் அனைவரும் பின்புறமாக தடுப்பு சுவர் அமைத்திருந்ததாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். ஆக்கிரமிப்பு என்ற பெயரில் தான் வீட்டில் இல்லாத வேளையில் சில பணியாளர்கள் முன் அறிவிப்பின்றி மேற்படி சுவற்றினை சேதப்படுத்திவிட்டார்கள் என தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். தனக்கு முன் அறிவிப்பு செய்திருந்தால், தானே அதனை அகற்றியிருப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தனது வீட்டினை ஒட்டியுள்ள சில வீடுகளில் இன்னமும் ஆக்கிரமிப்பு உள்ளதாகவும், அவர்களை எல்லாம் விட்டுவிட்டு தனது வீட்டில் மட்டும் ஒர வஞ்சனையாக ஆக்கிரமிப்பு அகற்றியுள்ளனர் எனவும் தனது

வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இன்னமும் நாசரேத்தில் அநேக இடங்களில் ஆக்கிரமிப்புகள் உள்ளதாகவும் தனது வீட்டினை சுற்றி ஆக்கிரமிப்பு அகற்றாமல் உள்ளதை தனது மனுவில் வரைபடமாக குறிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே உரியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் பதிவு செய்துள்ளார்

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, அம்மனுவிற்கான தற்போதைய செயல் அலுவலரின் விளக்கம், மற்றும் நேரடி வாக்குமூல பதிவு, ஆக்கிரமிப்பு அகற்றிய சமயத்தில் பணியில் இருந்த நாசரேத் பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் திருச்செந்தூர் வட்டாசியர் ஆகியோர்களின் வாக்குமூல பதிவுகளை பரிசிலித்து கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

மனுதாரர் தனது வீட்டின் காம்பவுண்டு சுவற்றின் பின்பகுதி ஆக்கிரமிப்பு என்பதை ஏற்றுக் கொள்வதோடு அதனை அகற்றியது குறித்து ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அருகிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றாததையம் தனக்கு உரிய அறிவிப்பு வழங்காததையும் சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலையில் உரிய அறிவிப்புகள் வழங்கப்பட்டதை அலுவலக ஆவணங்கள் மூலமாக அலுவலர்களால் உறுதி செய்யப்படவில்லை. மேலும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பான இனங்களில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு உரிய விதிகளின் கீழ் உரிய கால இடைவெளி அளித்தும், முன் அறிவிப்பு சார்வு செய்து விளக்கங்கள் பெற்றபின்னரே அவ்வாறான ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவேண்டும் என்பதை கீழ்மட்ட அதிகாரம் கொண்ட அலுவலர்களால் பின்பற்றப்படவேண்டுமென அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்றத்தால் ஆணையிடப்படுகிறது.

ஆக்கிரமிப்புகள் அகற்றும்போது நடுநிலையோடு அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றவேண்டும் எனவும் சிலரது ஆக்கிரமிப்புகள் மட்டும் அகற்றப்படுவதால் நடுநிலை தவறி செயல்படுவதாகவே கருதப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே நடுநிலையோடு செயல்பட்டு ஆக்கிரமிப்புகளை உரிய விதிகளை பின்பற்றி அகற்றிட நடவடிக்கை எடுக்குமாறு செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 -ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**-//ஆணைப்படி- அனுப்பப்படுகிறது//-**

செயலாளர்.

23.9.17

பெறுநர்

1.திருமதி ஏ.சாந்தி,
க/பெ திரு டி.குமாரநாயகம்,
97-சி, 2வது ஐசக் தெரு,
நாசரேத்,
திருச்செந்தூர் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
நாசரேத் தேர்வு நிலை பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3.மாவட்ட ஆட்சித் தலைவர்,
தூத்துக்குடி மாவட்டம்.